பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 03 2025 7 15

செவ்வாய்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- பிரிவினைவாதத்தை அனைவரும் நிராகரிக்க வேண்டுமென்று உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கேட்டுக் கொண்டுள்ளார்.
- சாலை விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிவதன் மூலம் அதனை குறைக்க முடியும் என்று மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.
- சிறுபான்மையினர் மேம்பாட்டிற்கு மத்திய அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருவதாக சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.
- பாலஸ்தீனத்தில் காஸாவை ஒட்டிய பகுதிகளில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 23 பாலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்.
- சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிராரத்தனா தாம்ப்ரே – சீனாவின் wushuang zheng இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

பிரிவினைவாதத்தை அனைவரும் நிராகரிக்க வேண்டுமென்று உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கேட்டுக் கொண்டுள்ளார்.,

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் மத்திய அரசு மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகள் காரணமாக ஜம்மு-கஷ்மீரில் பிரிவினைவாத செயல்கள் ஒடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும் வகையில் ஒரே மாதிரியான கொள்கைகளை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகக் கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையில் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு அமித்ஷா கூறியுள்ளார்.

[]<<<>>>[]

2025-26-ஆம் நிதி ஆண்டிற்கான நிதி மசோதா மக்களவையில் இன்று நிறைவேறியது.

மக்களவையில் இம்மசோதா மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், வரி செலுத்துவோருக்கு மதிப்பளிக்கும் வகையில் வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் வர்த்தக நடவடிக்கைகளை எளிதாக்கும் என்று அவர் கூறினார்.

தனி நபர் ஆண்டு வருமானம் 12 லட்சம் ரூபாய் வரை வருமான வரியிலிருந்து தள்ளுபடி வழங்கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்,.

புதிய வருமான வரி மசோதா நாடாளுமன்றத்தின் அடுத்த மழைக்காலக் கூட்டத்தொடரில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்கை எட்டும் நோக்கிலான திட்டங்கள் பட்ஜெட்டில் இடம்பெற்றிருப்பதாக நிதி அமைச்சர் தெரிவீத்தார்.

உற்பத்தி ஆலைகள் ஏற்றுமதி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கவும். ஏற்றுமதியில் போட்டித்தன்மையை மேம்படுத்தவும் உதவுடும் வகையில் மூலப்பொருட்களுக்கு வரி விகிதங்கள் குறைக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

மின்சார வாகனங்களுக்கான பேட்டரி உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் 35 பொருட்களுக்.கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இவை தவிர செல்போன் பேட்டரிகளுக்கான உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் 28 வகையான பொருட்களுக்கும் இந்த வரி விலக்கு பொருந்தும் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

[]<<<>>>[]

சாலை விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிவதன் மூலம் அதனை குறைக்க முடியும் என்று சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற சாலை பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கில உரையாற்றிய அவர், சாலை விபத்துக்களினால் உள்நாட்டு மொத்த உற்பத்தி மூன்று சதவீதம் அளவுக்கு பாதிக்கப்படுவதாகக் கூறினார்.

நாட்டில் சாலை விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 60 சதவீதமாக உள்ளது என்று கூறினார்.

இதில் 18 வயது முதல் 45 வயதுடையவர்களின் எண்ணிக்கை அதிகமாகும் என்று அவர் தெரிவித்தார்.

சாலை விபத்துக்களை குறைப்பதற்கு அவை குறித்த முறையான மதிப்பீடுகள் அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

விபத்துக்களினால் பாதிக்கப்படுபவர்களுக்கு உதவிடும் நபர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கப்பட்டு வருவதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சாலை விதிகள் குறித்து பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் திரு நிதின் கட்கரி கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

சுயசார்பு இந்தியாவுக்கான இலக்குகளை எட்டுவதில் சிறுபான்மையினரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது என்று மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற சிறுபான்மையினர் நல மாநாட்டில் உரையாற்றிய அவர், கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில் சிறுபான்மையினருக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

நாட்டில் உள்ள சிறுபான்மையினரின் மேம்பாட்டிற்கு மத்திய அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அமைச்சர் கூறினார்.

[]<<<>>>[]

நாட்டில் உள்ள ஆயிரத்து 737 கிராம பஞ்சாயத்துக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் முன் மாதிரி கிராம திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட உள்ளதாக மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக அவர் அளித்துள்ள பதிலில், இதுவரை 830 கிராம பஞ்சாயத்துக்கள் இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மனிதவளம், பொருளாதாரம் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திரு சிவராஜ் சிங் சௌகான் குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

ஒடிஸாவில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 12 சட்டப்பேரவை உறுப்பினர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்

அவை விதிகளுக்குப் புறம்பாக தவறான நடத்தை மற்றும் வன்முறையில் ஈடுபட்டதால் ஏழு நாட்களுக்கு அவை நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு அவர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆளும் பிஜேபி-யின் தலைமை கொறடா திரு சரோஜ் பிரதான் கொண்டு வந்த தீர்மானத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

[]<<<>>>[]

பீகார் மாநிலத்தில் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.

இதில் மாணவர்களைக் காட்டிலும் மாணவிகள் அதிக அளவில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

கலை, வணிகவியல் மற்றும் அறிவியல் பாடத் திட்டங்களில் மாணவிகளே முதலிடத்தை பெற்றுள்ளனர்.

[]<<<>>>[]

பாலஸ்தீனத்தில் காஸாவை ஒட்டிய பகுதிகளில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 23 பாலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்.

ஒரு வார காலத்தில் ஹமாஸ் அமைப்புக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொண்ட ராணுவ நடவடிக்கைகள் காரணமாக 700 பேர் கொல்லப்பட்டதாக பாலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

[]<<<>>>[]

ஆப்கானிஸ்தானில் பெண்கள் கல்வி பயில்வதற்கு விதிக்கப்படும் தடை தலைமுறைகளுக்கு இடையேயான இடைவெளியை அதிகரிக்கும் என்று ஐ நா எச்சரித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் புதிய கல்வி ஆண்டு தொடங்கும் மூன்றாவது ஆண்டாக பெண்கள் இடைநிலைக் கல்வி பயில தடை விதிக்கப்பட்டுள்ளதை அடுத்து, ஐ நா வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டில் இடைநிலை கல்வி பயிலும் பெண்களில் 11 லட்சம் பேர் பள்ளிக்குச் செல்வதில்லை என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பெண்கள் கல்வி பயில விதிக்கப்படும் தடை காரணமாக அந்நாட்டு பொருளாதார இழப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

இலங்கையின் ஏற்றுமதி ஒன்று புள்ளி மூன்று எட்டு பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது.

இது கடந்த ஆண்டு பிப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் நான்கு புள்ளி ஆறு இரண்டு சதவீதம் அதிகமாகும்.

வர்த்தக ரீதியிலான ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதன் காரணமாக அந்நாட்டில் ஏற்றுமதி துறை வளர்ச்சி கண்டு வருவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

தடகள வீரர்களின் பாலினம் கண்டறியும் சோதனை கட்டாயமாக்கப்படும் நடைமுறையை அறிமுகப்படுத்த உலக தடகள சம்மேளனம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய தடகள சம்மேளன தலைவர் திரு செபஸ்டியன்கோ, விளையாட்டுப் போட்டிகளில் பெண்கள் பிரிவில் பாலின பாகுபாடு தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதன்மூலம் வீரர்கள் தங்களது கவனத்தை சிதறவிடாமலும், தன்னம்பிக்கையுடனும் போட்டிகளில் பங்கேற்க உதவிடும் என்று அவர் தெரிவித்தார்.

டோக்கியோவில் இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் இந்த நடைமுறை அமல்படுத்தப்படும் என்று திரு செபஸ்டியன்கோ குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிராரத்தனா தாம்ப்ரே – சீனாவின் wushuang zheng இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

துருக்கியில் இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-2, 6-2 என்ற நேர் செட்களில் பெல்ஜியத்தின் Magali kempen - இங்கிலாந்தின் Maia lumsden இணையை வென்றது.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் குஜராத் அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாத்தில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ள இப்போட்யில் டாஸ் வென்ற குஜராத் முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

[]<<<>>>[]

சர்வதேச டென்னிஸ் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் சகாஜா யாமலப்பள்ளி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

டொம்னிக் குடியரசின் சாண்டோ டொமிங்கோவில் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-0, 6-2 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் தாரா மாலிக்கை வென்றார்.

[]<<<>>>[]

கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டியின் பதக்கப்பட்டியலில் தமிழகம் 25 தங்கம், 17 வெள்ளி, 25 வெண்கலம் என மொத்தம் 67 பதக்கங்களுடன்இரண்டாவது இடத்தில் உள்ளது.

*End of News*